மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 3/22
பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

-----------------------------------------------------------

| | |
|---|---|
| பெயர்: தவசி முத்து | தேதி : 27.04.26 |
| வயது : | த/பெ :சங்கரன்பிள்ளை |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

-----------------------------------------------------------

<u>27.04.26 முதல் விசாரணை தொடர்ச்சி</u>

05.07.2022 ம் தேதி தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கீழ் தபசில் சொத்திற்கு வழங்க பட்டாவின் உண்மை நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 1 ஆகும். 13.11.2025 ம் தேதி தபசில் புல எண் 760/8 ன் கிராம கணக்கு ஈஸ்வரன் பெயரில் உள்ளது என்பதற்கான தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 2 ஆகும். என் வாக்காளர் அடையாள அட்டைகளின் நகல்களை(2 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு பி.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2.என் குடும்ப அட்டையின் நகலினை தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு பி.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தபசில் வீட்டிற்குரிய மின் பயனீட்டு கட்டண அட்டைகளை (3 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 5 ஆகும். 2009 முதல் 2021 வரை தபசில்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.27 13:03:01 +0530

வீட்டிற்கு நான் செலுத்திய மின்கட்டண ரசீதுகளை (13 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 6 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.27 13:03:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.